28th February 1968]

New Hospitals

* 128 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the number of Hospitals that are proposed to be opened in the financial year 1967–68 ; and

(*b*) the basis on which the Hospitals are proposed to be opened ?

புதிய மருத்துவச் சாலேகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1967–68-ம் நிதி ஆண்டில் எத்தனை புதிய மருத்துவச் சாலேகள் திறக்க திட்டமிடப்பட்டுள்ளன ?

(இ) எந்த அடிப்படையில் புதிய மருத்துவச் சாலேகள் திறக்க திட்டமிடப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) திருச்சி தலைமை அரசாங்க மருத்துவ மனையில் 56 படுக்கைகள் கொண்ட சிறுவர் பகுதி ஒன்று திறக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணிகள் பல நிலைகளில் நிறைவேறி வருகின்றன. விபரங்கள் திரட்டப் பட்டு அவையின் முன் வைக்கப்படும்.

(இ) தேவையின் அடிப்படையில்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, 1966–67 நிதி நிலை அறிக்கையில் அப்போதிருந்த முதலமைச்சர் அவர்கள் ஐந்து முனிசி பல் நகரங்களில் ஆஸ்பத்திரிகள் திறக்கப் போவதாக சொன்னார்கள். ஆனால் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அதைப் பற்றி ஒன்று மில்லை. சென்ற ஆண்டிலும் ஒன்றுமில்லை. முதலில் திட்டமிடப்பட்டபடி ஆஸ்பத்திரி திறக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : தலைவரவர்களே, அது பற்றிய குறிப்பு இப்போது இல்லை.

Madurai Medical College

* 129, *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the students of Madurai Medical College suffer for want of water for drinking and bathing purposes ; and

(*b*) if so, the action taken thereon ?

மதுரை வைத்தியக் கல்லூரி.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்கு பதிலளிக்க வேண்டு கிறேன்.

(அ) மதுரை வைத்தியக் கல்லூரியில் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் தண்ணீர் இன்றி மாணவர்கள் அவதிப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?